KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v2in02.1

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

கவி கா.மு. ஷெரீபின் அரசியல் கட்டுரைகள்

THE POLITICAL ESSAYS OF POET KA.MU. SHERIF

Dr. U. Alibava[1,*]

[1] Professor & Head Department of Tamil Studies Bharathidasan University Tiruchirappalli - 620 024
***Corresponding author:** Dr. U. Alibava, alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 20 April 2017
Revised: 22 April 2017
Accepted: 25 April 0217
Published 01 May 2017

Article ID
KIJTS-2017-0034

Peer review
Double-blind peer review

Keywords
Ka.Mu. Sherif
Political Essays
Tamil Arasu Kazhagam
Tamil Nationalism
Muslim League
Religious Harmony
Tamil Muslims
Political History
Social Consciousness
Secularism.

ABSTRACT

This article examines the political ideas, social consciousness, and contributions of Poet Ka.Mu. Sherif through his political essays. Although he was primarily known as a poet and literary personality, he also played a significant role in Tamil Nadu's political and social movements. His writings reflect his concern for Tamil identity, linguistic rights, regional autonomy, religious harmony, and national integration. The study focuses on three important works: Why Was the Tamil Arasu Kazhagam Founded? What Does It Advocate?, Muslims in Tamil Arasu, and Is the Muslim League Necessary? Through these works, Sherif discusses the historical background and objectives of the Tamil Arasu Kazhagam, particularly its efforts to protect Tamil-speaking territories and promote Tamil as an administrative language. He also emphasizes the historical relationship between Tamil Muslims and other Tamil communities, highlighting communal harmony, mutual respect, and the contributions of Muslims to India's freedom movement. Furthermore, his writings explore the political identity and rights of Muslims within Tamil society and Indian democracy. His political essays are not merely expressions of personal opinion but also valuable historical records that illuminate the political developments and social conditions of Tamil Nadu during his time. This article highlights the significance of Sherif's political writings in understanding Tamil nationalism, secularism, communal harmony, and the evolution of regional political consciousness. It also emphasizes the need to collect and publish his unpublished political essays and newspaper editorials for a deeper understanding of Tamil Nadu's political history.

How to cite this article: Dr. U. Alibava (2017). கவி கா.மு. ஷெரீபின் அரசியல் கட்டுரைகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, 1. https://doi.org/10.63300/kalanjiyam.v2in02.1
Copyright and licence: © 2017 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் உ. அலிபாவா

பேராசிரியர் & தலைவர்,

தமிழியல்துறை,

பாரதிதாசன் பல்கலைக்கழகம்,

திருச்சிராப்பள்ளி - 620 024

Email : alibavapkm@gmail.com

கவி கா.மு. ஷெரீப் தமிழ்க் கவிதை உலகிலும் தமிழ் எழுத்துலகிலும் குறிக்கத்தக்க பெருங்கவிஞராவார். இவர் திருவாரூர் மாவட்டத்திலுள்ள அபிவிருத்திஸ்வரம் என்னும் ஊரில் 11.09.1914 அன்று பிறந்தார். காதர்ஷா, இபுராஹிம் பாத்தும்மாள் ஆகியோர் இவருடைய பெற்றோராவர். வறுமை காரணமாக பள்ளி சென்று பயிலாத இவர் தாய் தந்தையரிடமும் மற்றோரிடமும் சென்று தாமாக முயன்று கல்வி கற்றார். இளமையிலேயே கவி புனையும் ஆற்றல் பெற்ற இவர் தமிழ் இலக்கிய வகைமைகள் பலவற்றுள்ளும் கால் பதித்துள்ளார்.

கவிஞர் அடிப்படையில் கவிஞராக இருப்பினும் அவர் கவிதைப் படைப்போடு மற்றும் நின்று விடவில்லை. சமூகப் பிரக்ஞையுள்ள ஒரு மாமனிதராகத் திகழ்ந்தார். அதனால் கவிஞர் அரசியல் விழிப்புணர்வுக் கட்டுரைகளை மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனும் எண்ணத்துடன் தாம் நடத்திய ஏடுகளிலும் பிற இதழ்களிலும் எழுதிக் குவித்தார். அவற்றைத் தொகுத்து,

1. தமிழரசுக் கழகம் ஏன் வந்தது? என்ன சொல்கிறது?

2. தமிழரசில் முஸ்லீம்கள்

3. முஸ்லீம் லீக் தேவைதானா?

என்கின்ற நூல்களாகவும் வெளியிட்டுள்ளார்.

கவி கா. மு. ஷெரீப் சின்னஞ் சிறு வயதிலேயே பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் மீது கொண்ட ஈடுபாட்டால் அரசியலுக்குள் நுழைந்தார். பெரியாரின் கொள்கைகளுள் ஏற்பட்ட முரண்பாட்டால் பெரியாரிடமிருந்து வெளிவந்தார்.

காங்கிரஸ் பேரியக்கத்திலும் கவிஞர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றியவர். கவிஞர் காங்கிரஸில் ஈடுபடுவதற்கு முன்பு ம.பொ. சிவஞானம் என்பாரின் தலைமையில் தொடங்கப் பெற்ற தமிழரசுக் கழகத்தில் தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்றினார். தமிழரசுக் கழகத்தில் மா.பொ. சிவஞானத்துக்கு அடுத்த நிலையில் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றிய கவிஞர் தமிழ் ஆட்சி மொழி, தமிழக எல்லை மீட்புப் போராட்டங்களில் முன்னின்று நடத்தித் தமிழக எல்லை சென்று போராடினார். எழுச்சி மிகு சொற்பொழிவுகளை ஆற்றினார். களத்திலே நின்று போராடிய போராட்ட வீரர்களை உற்சாகப் படுத்துவதற்காகக் களப் பாடல்களை எழுதினார். எல்லை மீட்புப் போராட்டங்களில் ஈடுபட்டுப் பல முறை சிறை சென்ற கவிஞர் எல்லை மீட்புப் போராட்டங்களில் ஈடுபட்டது பற்றி அவ்வப்போது பத்திரிக்கைகளில் கட்டுரைகளாக எழுதியுள்ளார். பின்னர் அக்கட்டுரைகளைத் தொகுத்துக் கவிஞர் நூல்களாகவும் வெளியிட்டுள்ளார். அவை கவிஞரின் அரசியல் கட்டுரைகளாகத் திகழ்கின்றன.

1990இல் கவி கா.மு. ஷெரீப் களப்பாட்டு என்ற 56 பக்கங்களைக் கொண்ட நூலை வெளியிட்டுள்ளார். அதில் அவர் அவரது அரசியல் பணிகள் குறித்து அவரே குறிப்பிடுகிறார்:

“சுதந்திரத்திற்கு முந்திய இந்தியாவில் எந்த மாநிலமும் ஒரு தனி மொழியினைக் கொண்டதாயில்லை. எல்லா மாநிலங்களிலுமே ஆங்கிலம்தான் ஆட்சிமொழி, பயிற்சி மொழி, நீதிமொழி, நிர்வாக மொழி! இன்றைய இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில மொழியே ஆட்சிமொழி, மாநிலங்களின் பெயர்களும்கூட மாநில மொழிகளின் பெயராலேயே உள்ளன. இவ்வாறாக அமைந்திட வேண்டும் என்பதே பழைய காங்கிரஸ் கொள்கை. காந்திஜி வகுத்தளித்த திட்டம். ஏனைய தேசியத் தலைவர்களெல்லாம் ஏற்றுக் கொண்டதுமாகும்.

சுதந்திரம் கிட்டியவுடன் மாநிலங்களின் புனரமைப்பிற்கான செயற்பாடுகள் தொடங்கின. கட்சிப் பாகுபாடின்றி, அந்த அந்த மாநிலங்களில் அவ்வவ் மொழிக்காரர்கள் ஒருங்கிணைந்துச் செயல்படத் தொடங்கினர்.

தமிழகத்தின் நிலை மட்டும் வேறுவிதமாயிருந்தது இங்கேயுள்ள கட்சிகள் எது ஒன்றும் இப்பிரச்சினையில் அக்கறை காட்டிடவில்லை!

'மதராஸ் மனதே' என்றனர் ஆந்திரர். 'காசர்க் கோடு முதல் கன்னியாகுமரி வரை தமதென்றார் கேரளியர்', 'நீலகிரி மட்டுமின்றி கோயமுத்தூரும் தங்கட்கே' என்றார்கள் கன்னட நாட்டினர்.

தமிழர்க்குரிய பகுதிகளை காத்திடவோ கேட்டிடவோ எவரும் முன்வரவில்லை. 'மதராஸ் மனதே' எனச் சென்னை நகரின் தெருக்களில் பேரணி நடத்தினர். ஆந்திரர் தஞ்சை மாவட்டமும் மதுரை மாவட்டமும் எங்களவையே; அவை தெலுங்கர் ஆண்ட பகுதிகள் எனவும் பேசத் தொடங்கினர்.

ஆந்திர கேரள கன்னடக்காரர்களிடமிருந்து தமிழ்நாட்டை, நிலத்தைக் காத்திடவும், பறிபோய் விட்ட எல்லைகள் மீட்டிடவும் தமிழர்கட்கு ஒரு அமைப்புத் தேவைப்பட்டது. தமிழரசுக் கழகம் துவக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம், திருவிதாங்கூர் ராஜ்யத்தில் இணைக்கப்பட்டிருந்தது. நூற்றுக்கு நூறெனத் தமிழர்கள் வாழுகின்ற அப்பகுதியைத் தமிழகத்துடன் இணைத்திட வேண்டும் என அங்குள்ள தமிழர்கள் கொதித்தெழுந்து கூறினர். அதற்கென அவர்கள் கண்ட அமைப்பு 'திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ்!.' அதன் செயற்பாட்டினர் 'தாய்த் தமிழகத்துடன் கன்னியாகுமரி மாவட்டத்தை இணைத்திட வேண்டும்' என இயக்கம் கண்டனர்.

திருப்பதி முதல் சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைத்திட வேண்டும் என்பதற்கு அங்குள்ள தமிழர்கள் இயக்கம் துவக்கினர். அந்த இயக்கத்தின் பெயர் 'வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டி' தெற்கிலும் வடக்கிலும் உள்ள ஒரு இரு அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு தமிழரசுக் கழகம் செயல்படத் தொடங்கிற்று. விளக்கக் கூட்டங்கள் வேகமாக நடந்தன. பல இளைஞர்கள் தமிழ் மாநிலம் அமைத்திடத் தங்களின் உயிரையும் பொருட்டாக மதிக்காமல் உழைத்திட முன் வந்தனர். நாடு முற்றிலும் தமிழரசுக் கிளைக் கழகங்கள் ஆரம்பமாயின. பல ஆயிரம் தொண்டர்கள் சேர்ந்தனர். பலமான அமைப்பாகத் தமிழரசுக் கழகம் வளர்ந்தது.

பத்திரிகைகளின் ஆதரவில்லை. கட்சிகளின் ஒத்துழைப்பில்லை. பணபலமும் இல்லை. ஆனால் மக்களின் ஆதரவு நாட்குநாள் பெருகிற்று. மும்முனைகளிலும் போராட்டம் வலுவாக! திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யம் (கேளரத்திற்கு அன்றுள்ள பெயர்) மட்டுமல்ல, மதராஸ் ராஜ்ய அரசும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. பல்லாயிரம் பேர் சிறைப்பட்டனர். இருவர் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தனர். இருவர் சிறைச்சாலையில் உயிர் துறந்தார்கள்.

சென்னை நகரை ஆந்திரர்கட்கும் தமிழர்கட்கும் சரி பாதியாகப் பிரித்தளிப்பதென்ற மத்திய அரசின் திட்டம் முறியடிக்கப்பட்டது. சென்னையை சி. ஸ்டேட்டாக டில்லியின் கீழ்வைப்பதென்கின்ற திட்டம் உடைத்தெறியப்பட்டது. சென்னை தமிழர்கட்கே என ஆக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்பட்டது; 1957 நவம்பர் முதல் நாளன்று சிந்தூர் மாவட்டம் முழுமையுமாக ஆந்திரர்கட்கென ஆக்கப்பட்டதை எதிர்த்துப் போராடித் திருத்தணித் தாலுகா மீட்கப்பட்டது. 1960 ஏப்ரல் முதல் நாள்.

திருத்தணி மீட்சியில் வடக்கெல்லைப் பாதுகாப்புக் கமிட்டியின் செயற்பாடு மிக அதிகம். இதற்கெனவே உழைத்து உயிர் துறந்தவர் மங்களம் கிழார் எனும் மாமனிதர் மற்றும், திருந்தணி சுப்பிரமணியம், விநாயகம் எம்.எல்.ஏ., போன்றோரும் குறிப்பிடத்தக்கவராவர். கன்னியாகுமரி மாவட்ட மீட்சியின் பெரும் பங்கு நா. காங்கிரஸ் அமைப்பினரையே சாரும். அதில் அங்கம் வகித்த பெரிய மனிதர்கள் பலர் செல்வாக்கு மிகுந்த அவர்களைச் செயற்படச் செய்த செயலாளர் தெற்கெல்லைத் தளபதி எனப் பெயர் பெற்ற திரு பி.எஸ்.மணி. இவர் சுதந்திரப் போராட்டத் தியாகியுமாவார்.

‘இப்போராட்டங்களில் என் பங்கும் குறைந்ததன்று. திங்கள் இரு முறை ஏடுகள் இரண்டும், கிழமை ஏடு ஒன்றுமாக மூன்று ஏடுகளை நடத்தினேன். தமிழகமெங்கும் சுற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றினேன் பொதுச் செயலாளனாகப் பொறுப்பெற்றுச் செயல்பட்டது மட்டுமன்றி, பல போராட்டங்களையும் முன்னின்று நடத்தினேன்; சிறைப் பறவையுமானேன்’.

‘நானும் தலைவர் ம.பொ.சி. அவர்களும் இணைந்து செயல்பட்டது, சமயம் கடந்த இனவழி ஒருமைப்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டு’.

தமிழக எல்லைப் போராட்டத்தையும். அதன் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் நான் எழுதிய பாடல்கள் அனந்தம் அச்சிடற்கெனத் தேடியபோது இந்நூலில் உள்ள அளவே கிட்டின. மேலும் தேடும் பணியில் உள்ளேன் கிட்டியதும் முழுவதுமாக வெளிவரும்.

இந்திய மாநிலங்களின் சீரமைப்புப் பற்றியும், அந்த அடிப்படையில் புதிய தமிழகம் அமைந்தது பற்றியும் ஒரு நூல் வருமானால் ஆய்வாளர்கட்கு மிகவும் பயன்தரும். இந்த நூல் அளவில் சிறியதேயாயினும், வரலாற்றுச் சிறப்புடையது. 1947-க்குப் பின்னர் 1960 வரையிலுமான சில நல்ல தகவல்களை இந்நூல் தருகின்றது” என்று 20.12.1990-இல் வெளியிட்ட இந்நூலின் முன்னுரையில் கவி.கா.மு. ஷெரீப் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் எல்லைகளைக் காத்திடத் தனது கவிதை மூலம் மக்களின் உணர்வுகளைத் தூண்டியவர் கவி கா.மு. ஷெரீப் என்பது அவருடைய களப்பாடல்களில்,

தமிழரசுக் கழகம் ஏன்?

தமிழரென்று சொல்லுவதேன்?

கமலமுகப் பாரதத்தாய்

கருணைமிகு புத்திரர்நாம்!

இமயமுதல் குமரிவரை

எல்லைகொண்ட இந்தியாதான்

நமதென்ற பெருநோக்கில்

நாம்வாழ வேண்டுமென்றே

பரந்தமனம் கொண்டவர்போல்

பலர்பேசக் கேட்கின்றோம்!

விரிந்தமனம் கொண்டவர்போல்

விளம்புவதைப் பார்க்கின்றோம்!

என வெளிப்படுகிறது.

தமிழரசுக் கழகம் ஏன் வந்தது? என்ன சொல்கிறது?

கவிஞர் 'தமிழரசுக் கழகம் ஏன் வந்தது? என்ன சொல்கிறது?' எனும் இந்நூலில் தமிழரசுக் கழகம் எதற்காகத் தொடங்கப்பட்டது? அவ்வியக்கத்தின் பணிகள் யாவை என்பதையெல்லாம் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"21.11.1946-இல் சென்னை, மண்ணடி லிங்கிச் செட்டித் தெருவில் 'தமிழ் முரசு' அலுவலகத்தில் திரு.வி.க, தெ.பொ.மீ., மு.வ., அன்பு கணபதி, ம.பொ.சி. உட்பட சென்னைவாசிகள் பலர் கலந்து கொண்ட கூட்டத்தில் 'தமிழரசுக் கழகம்' என்ற பெயருடன் ஒரு கழகம் நிறுவப்பட்டது. அதன் தலைவராக ம.பொ. சிவஞானம் தேர்ந்தெடுக்கப்பட்டார். ம.பொ.சி.யின் இயக்கத்தில் 'கவிஞர்களான கு.சா. கிருஷ்ண மூர்த்தி, கா.மு.ஷெரீப், கு.மா. பாலசுப்பிரமணியம், வானம்பாடி சுந்தரேசன் ஆகியோருட்படக் கவிஞர் பலர் தமிழரசுக் கழகத்தில் சேர்ந்து பின்னாளில் பேச்சாளர்களாக மலர்ந்தனர்" (எனது போராட்டம், ப. 500) என்று ம.பொ.சி. குறிப்பிட்டுள்ளார்.

"1951, 1952-ஆம் ஆண்டுகளில் நாஞ்சில் நாட்டில் இன்றைய குமரி மாவட்டத்தில் பல ஊர்களில் தமிழரசுக் கிளைக் கழகங்கள் அமைக்கப்பட்டன. இதற்காக ம.பொ.சி. அவர்கள் கழகத்தைச் சேர்ந்த சிறந்த சொற்பொழிவாளர்களாகிய கவி கா.மு. ஷெரீப், புலவர் ந. சஞ்சீவி, கவி வானம்பாடி ஆகியோர்களை நாஞ்சில் நாட்டிற்கு அனுப்பினார்.

இவர்களுடைய பிரசங்கங்கள் திருவிதாங்கூர் - தமிழக விடுதலை உணர்ச்சியை மட்டுமல்ல. வடவேங்கடம், தென்குமரி, இடையேயுள்ள நிலப்பரப்பு புதிய தமிழகமாக உருவாக வேண்டுமென்ற உணர்ச்சியையுங்கூட ஊட்டியது' என்பர் பி.எஸ்.மணி. 1954 ஜூன் 3, 4 ஆகிய தேதிகளில் நாஞ்சில் தமிழரசுக் கழகத்தின் முதல் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டின் இலக்கிய விழாவிற்குக் கவிஞர் தலைமை தாங்கினார். அரசியல் மாநாட்டிற்கு ம.பொ.சி. தலைமை தாங்கினார். நாஞ்சில் பி.எஸ்.மணி என்றாலே தெற்கு எல்லைப் போரின் தளபதி என்று நினைவிற்கு வரும். அத்தகைய தளபதி 1956-இல் எழுதிய தனது நூலில் கவி கா.மு. ஷெரீப்பின் பங்களிப்பை வருணித்துள்ளார். மாநாட்டில் பி.எஸ்.மணி வரவேற்புரை ஆற்றினார். தியாகிகள் தேவசகாயம், செல்லையா பெயர்களில் பந்தல் அமைந்திருந்தது. தினமலர் டி.வி. இராமசுப்பையர் மாநாட்டு அரங்கில் புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

தாணுலிங்க நாடாரும் குஞ்சன் நாடாரும் உரை நிகழ்த்தினர். மாநாட்டில் திரு. சோமயாசுலு, கவி கா.மு. ஷெரீப் போன்ற தமிழகப் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். ஏ.பி. நாகராசனின் கட்டபொம்மன் ஓரங்க நாடகமும் நடைபெற்றது. ஔவை டி.கே. சண்முகம், செங்கோட்டை ஏ.ஆர். கரையாளர், தேவிகுளம் குப்புசாமி ஆகியோர் மாநாட்டில் உரையாற்றினார்" (பி. யோகீசுவரன், திருவிதாங்கூர் தமிழர் போராட்ட வரலாறு, ப. 168) எனும் செய்திகள் அறியக் கிடைக்கின்றன.

நாகர்கோவில் என்.ஏ. வேலாயுதம் 1957 ஜனவரி 26-இல் 56 பக்கங்களைக் கொண்ட 'தமிழரசுக் கழகத் தலைவர்களின் வாழ்க்கையில்!' எனும் நூலினைத் தொகுத்துள்ளார். அதில் முதல் கட்டுரை ம.பொ.சி. பற்றியது. அடுத்த கட்டுரை வடவெல்லைத் தளபதி கே. வினாயகம் பற்றியது. அதற்கு அடுத்த கட்டுரை அண்ணன் கவி கா.மு. ஷெரீப் பற்றியதாகும். இந்த நூலின் வாயிலாகத் தமிழரசுக் கழகத்தில் ம.பொ.சி.க்கு அடுத்த நிலையில் கவி கா.மு. ஷெரீப் இருந்தார் என்பதை அறிய முடிகிறது" (காலம் போற்றும் கவி கா.மு. ஷெரீப், ப.157) என்பார் செ. திவான்.

"தன் மேடைப் பேச்சாலும், எழுத்து வன்மையாலும் தமிழகத்திற்குப் பல வருடங்களாக உழைத்து வருகிறார். விவாதத் திறமை மிக்கவர். திராவிட நாடு பிரச்சனைகளில் கேள்விகள் எழும்போது விவாதத் திறமையோடு பதில் கொடுத்து எதிரிகளுக்கும் விளங்கும்படி செய்வதில் வல்லவர். 1951-இல் நாகர்கோவிலில் நடந்த தமிழரசுக் கழக மாநாட்டில் கலந்து திருவிதாங்கூர் தமிழகப் போராட்டத்திற்கு வித்திட்டவர்களில் கா.மு. ஷெரீபும் ஒருவர். தமிழகப் படத்தையும் திறந்து வைத்து அரிய சொற்பெருக்கு ஒன்றும் நிகழ்த்தினார். 1954இல் தெற்கெல்லைப் போராட்டத்தில் கலந்து கொள்ளத் தாயகத்திலிருந்து ஒரு தொண்டர் படை திரட்டிக் கொண்டு வந்தவர்.

திருவிதாங்கூர் தமிழகத்திற்குப் பல தடவைகள் வந்து சொற்பொழிவுகள் நடத்தித் தாயகத்தையும் திருவிதாங்கூர் தமிழகத்தையும் இணைக்கப் பாடுபட்டார். பல அரிய புத்தகங்களை எழுதி வெளியிட்டார். சமீபத்தில் சென்னையில் வட எல்லைக் கிளர்ச்சி நடைபெற்ற போது, அடுத்தடுத்து இரு தடவைகள் அரசாங்கத்தின் தடையை மீறிச்

சிறை சென்றார். எங்கள் எல்லைகளை அடைந்தே தீருவோம் என்று போலீஸ் அதிகாரியிடமே சங்கநாதம் செய்தார்.

அப்போது அவர் உணர்ச்சியின் உருவமாகத் தோற்றமளித்தார். கழிந்த சில ஆண்டுகள் தமிழரசுக் கழகத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். தொடர்ந்து பல ஆண்டுகளாக அதன் காரியக் கமிட்டி அங்கத்தினராகவும் இருந்து வருகிறார்.

தமிழரசு மலர தன் ஆவியையும் கொடுக்க அஞ்சாத தமிழரசுக் கழகத்தவரில் முதன்மை பெற்றவர்" (என்.ஏ. வேலாயுதம், தமிழரசுக் கழகத் தலைவர்களின் வாழ்க்கையில், அன்பு நிலையம், நாகர் கோவில், 1957, பக். 9 - 11) எனக் குறிப்பிடப் பெறும் கவி கா.மு. ஷெரீப், 'தமிழரசுக் கழகம் ஏன் வந்தது? என்ன சொல்கிறது?' எனும் தம் நூலில் தமிழரசுக் கழகத்தின் தோற்றம் மற்றும் நோக்கங்கள் குறித்து, "இந்திய விடுதலைக்குப் பிறகு மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, தமிழகத்தின் எல்லைகளை வரையறுத்து, தமிழ் பேசும் பகுதிகள் அண்டை மாநிலங்களுக்குச் சென்றுவிடாமல் தடுத்துப் போராடுவதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது, மெட்ராஸ் (சென்னை) மாகாணத்திலிருந்து ஆந்திரா பிரியும்போது, சென்னை நகரை ஆந்திராவின் தலைநகராக மாற்றத் தெலுங்கு பேசும் மக்கள் கோரினர். ஆனால், "தலை கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்ற முழக்கத்துடன் மா.பொ.சி. நடத்திய தீவிரப் போராட்டமே சென்னை தமிழ்நாட்டின் தலைநகராக நீடிப்பதற்கு முக்கியக் காரணமாக அமைந்தது, ஆந்திர எல்லைப் பகுதியில் இருந்த திருத்தணி (தணிகை) போன்ற பகுதிகளையும், கேரளாவுடன் இணைந்திருந்த குமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் போன்ற தமிழ் பேசும் வடக்கு மற்றும் தெற்கு எல்லைப் பகுதிகளையும் போராட்டங்கள் நடத்தித் தமிழ்நாட்டுடன் இணைக்கச் செய்தது, "தமிழ் வளர, தமிழர் வாழ, தமிழ்நாடு செழிக்கத் தமிழரசு வேண்டும்" என்ற கொள்கையின் அடிப்படையில், சுதந்திர இந்தியாவில் தமிழர்களுக்கென சுயாட்சி கொண்ட ஒரு தமிழ் மாநிலம் அமைய வேண்டும் என்பதை இவ்வியக்கம் வலியுறுத்தியது. தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, மரபு மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும், தமிழ் பேசும் மக்களின் அரசியல், சமூக முன்னேற்றம் உறுதிசெய்யப்பட வேண்டும் என்பதையும் இயக்கம் நோக்கமாகக் கொண்டது" எனத் தெளிவாக எடுத்தியம்புகிறார். தமிழரசுக் கழகத்தின் செயல்பாடுகளையும் குறிப்பிடுகிறார்.

தமிழரசில் முஸ்லிம்கள்

'தமிழரசில் முஸ்லீம்கள்' எனும் நூல் கவிஞரால் 1951ஆம் ஆண்டு வெளியிடப் பட்டுள்ளது.

"ஜெர்மனியிலே, 'ஜெர்மன் - யூதன்' என்ற சண்டையை நாம் கேட்டிருக்கிறோம். கிறிஸ்தவர்களிலே, கத்தோலிக் - 'புரட்டஸ்டண்ட்' பேதம் நமக்குத் தெரியும். மற்றும் 'நீக்ரோ - அல்லாதவன் நிற வெறியும் இன்னும் நீங்கியபாடில்லை! அரேபியாவில்

அரேபியர்களுக்குள் சண்டை. வட இந்தியாவில் இந்து முஸ்லிம் கலவரம். முஸ்லிம் நாடும், முஸ்லிம் நாடும் மோதிக்கொள்ளும் விநோதங்கள் உலகில் நடைபெறுகின்றன. ஆனால், இத்தனைக்கும் மத்தியிலே, தமிழகத்திலே, நாம் 'இந்து - முஸ்லிம்' என்ற பேதத்தை மறந்து ஒற்றுமையுடன் உலக அறியாமையைப்பற்றி பேசிச் சிரித்துக்கொண்டிருக்கிறோம்.

இஸ்லாமியப் பெண்ணிற்கு ஒரு ஆபத்து என்றால் அது, தன் சகோதரிக்கு - தாய்க்கு வந்ததாக இந்து எண்ணுகிறான். அதைப்போல, ஒரு இந்துச் சகோதரியை துஷ்டர்கள் சூழ்ந்துகொண்டார்கள் என்றால், தன் உயிரையும் மறந்து அவளைக் காப்பாற்ற ஒரு இஸ்லாமியச் சகோதரன் முன் வருகின்றான். கற்பனையல்ல; இப்படி நடந்த கதைகள் ஆயிரம் ஆயிரம். உதாரணமாக - காட்டுபாவா பள்ளிவாசல் என்ற ஊரிலே அடங்கியிருக்கும் இஸ்லாமியப் பெரியார். இந்துப் பெண்களைக் காப்பாற்றும் பணியில் உயிர் துறந்தவர். சில ஆண்டுகளுக்கு முன்பு வாணியம்பாடி - ஆம்பூரில் நடந்த இந்து முஸ்லிம் கலவரத்தில் முஸ்லிம் பெண்ணைக் காப்பாற்றும் பணியிலே இந்து சகோதரர் ஒருவர் உயிர் நீத்திருக்கிறார். இந்த நிலை தமிழகத்திற்கு அப்பால் இந்தியாவில் வேறு எந்த இடத்திலும் காணவே முடியாது. இது இன்று நேற்றல்ல, தொன்று தொட்டுத் தமிழகத்திலே நடந்து வருகிறது. இதற்குக் காரணம் தமிழர்களின் பண்பாடு என்பதோடல்லாமல் வடநாட்டைப் போல் தமிழ் நாட்டில் முஸ்லிம்கள், புரவியேறி, போர் முரசம் கொட்டி, நாடு பிடித்து ஆளவேண்டும் என்ற நப்பாசைகொண்டு வந்தவர்களல்ல என்பதும் ஒன்றாகும்" (கவி கா.மு. ஷெரீப், தமிழரசில் முஸ்லீம்கள், ப. 1) என நூலினைத் தொடங்கும் கவிஞர் இந்து - முஸ்லீம் ஒற்றுமை, காலங்காலமாக இருந்து வரும் சமய நல்லிணக்கம், இந்திய விடுதலையில் தமிழக முஸ்லீம்களின் பங்களிப்பு ஆகியவற்றை விரிவாக விளம்புகிறார்.

"வடநாட்டில் முஸ்லிம் அரசர்கள் தத்தம் படைகளுடன் புகுவதற்கு முன்பே வர்த்தக ரீதியில், கள்ளிக்கோட்டை, காயல்பட்டினம், நாகப்பட்டினம் போன்ற துறைமுகப் பட்டினங்களில் அரேபிய வணிக முஸ்லீம்கள் குடியேறினார்கள் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. இவர்கள் சந்ததியாரும், இந்துக்களாக இருந்து இஸ்லாத்தைத் தழுவியவர்களுமாகிய தமிழர்கள் தான் இன்று தமிழகத்திலே வாழும் தமிழ் முஸ்லீம்கள், பிற்காலத்திலே வடநாட்டரசர்கட்கும் தென் நாட்டுக் குறுநில மன்னர்கட்கும் நடந்த போராட்டங்களிலே இந்தத் தமிழ் முஸ்லிம்கள், தன் நாட்டுப் படையினருடன் சேர்ந்து வட நாட்டு ஆட்சியினரை எதிர்த்தே வந்திருக்கின்றனர். இதில் தலை சிறந்தவன் மகமத்கான். இவன் 'செஞ்சியை ஆண்ட 'தேசிங்" என்ற இந்து அரசனுடன் சேர்ந்து வடநாட்டுச் சுல்தானின் வரி வசூலிப்போராக விளங்கிய ஆர்க்காட்டு நவாபை எதிர்த்த சுத்த வீரன். 'மகமத்கானின் தேசப்பற்றையும், சிநேகப் பான்மையையும் உணர்ந்தி தேசிங், போரில் வெற்றி பெற்றுங்கூட மகமத்கான் மாண்டுவிட்டதால், தன் வாழ்வைத் தானே முடித்துக்கொண்டு வீர சுவர்க்கம் எய்தினான் என்று வரலாறு செப்புகிறது. இந்த இரு இணையற்ற வீரர்களையும் புகழ்ந்து பேசாத நூலாசிரியர்கள் இல்லை.

இராமநாதபுரம் சேதுபதி மன்னனிடத்திலே சையத் காதிர் என்ற முஸ்லிம் பெரியார் அமைச்சராக அமர்ந்து பணி புரிந்திருக்கிறார். இவருக்கிருந்த தமிழ்ப் பற்றிற்கு எல்லையே இல்லை! 'செத்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி' என்று தமிழ்ப் புலவர்கள் பாராட்டிப் பாடிய வள்ளல் இந்த சையத்காதிர்தான். சையத்காதிர் என்பது தமிழ் மரபுப்படி, திரிந்து சீதக்காதியாயிற்று. இப்படி 'இந்துவென்றும், முஸ்லிமென்றும் பிணங்கி நிற்காமல், நாங்களும் தமிழர்கள்; எங்கள் தாய்மொழி தமிழ், எங்கள் தாய் நாடு தமிழ்நாடு என்று தமிழ் முஸ்லீம்களும் ஏனைய தமிழர்களோடு இணைந்து வாழ்வதினால்தான், வடநாட்டில் மிக விபரீதமாக இந்து முஸ்லீம் கலவரம் நடந்த போதெல்லாம்கூட, தமிழ்த்தாயின் மடியிலே அவளுடைய சம அன்புக்குப் பாத்திரமான பிள்ளைகளாக நாம் வாழ முடிகிறது.

மத அநுஷ்டானங்களைத் தவிர மற்றபடி, நாட்டுப்பற்று, மொழிப்பற்று போன்றவையெல்லாம் இஸ்லாமியர்களுக்கு சர்வதேசியமல்ல. அதாவது பொதுப் படையானதல்ல. அவனவன் பிறந்தநாட்டின் மீது பற்று வைக்கவேண்டுமென்பதே இஸ்லாமியத் தத்துவம். இதை முகமத்நபி (சல்) அவர்கள் மிக வலியுறுத்திக் கூறியிருக்கிறார். 'நாட்டுப் பற்றில்லாதவனுக்கு சுவர்க்கமில்லை' என்பது திருக்குரான் வாக்கியம். இஸ்லாமியன் என்றாலே 'மனித சமுதாயத்திற்கு தொண்டு புரிபவன்' என்று தான் அர்த்தம். சமத்துவம், சமாதானம், சகோதரத்வம் என்பவைதான் இஸ்லாத்தின் அடிப்படைத் தத்துவம். யாத்ரீகர்களாக வந்த கிருஸ்து மதப் பாதிரிகளுக்கு அவர்கள் மத அநுஷ்டானப்படி கடவுளை வணங்க மதீனாவின் மசூதியிலே இடங்கொடுத்தார் நபி (சல்) அவர்கள். கொல்ல வந்த எதிரியையும் சந்தேகிக்காமல், வழுக்கி விழுந்த அவனுடைய வாளையெடுத்து அவனிடமே கொடுத்த பெருமை நபிகள் நாயகம் (சல்) அவர்கட்கு உண்டு.

இதெல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால் இஸ்லாமியர்கள் சமத்துவவாதிகளாக இருக்க வேண்டும். சந்தேகக்காரர்களாக ஆகிவிடக்கூடாது என்பதைத்தான். நாமும் நம்பிக்கைவாதிகள் தான். நம்முடைய முன் நாள் வரலாறும் அப்படித்தான் கூறுகின்றது.

இந்தியாவில் சுதேசி இயக்கம் நடந்தபொழுது நம் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளை தமிழ் நாட்டிலும் அதைத் துவக்கினார். அதன் காரணமாக 1908-ஆம் ஆண்டிலே தூத்துக்குடியில் நடந்த போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர் நீத்தவர்களில் இஸ்லாமியர்களும் உண்டு. அவர் நடத்திய இந்தியா கப்பல் கம்பெனிக்கு பெரும் நிதி கொடுத்துதவிய பெருமை தமிழக முஸ்லீம்களாகிய நமக்கு உண்டு. பின்பு காங்கிரஸ் நடத்திய தேசீயப் போராட்டங்களிலும் இஸ்லாமியர்களும் பங்கு கொண்டு ஈடு இணையில்லாத் தொல்லைகளை ஏற்றிருக்கிறார்கள்.

இப்படி இந்துவும் இஸ்லாமியர்களும் எல்லாக் காரியங்களிலும் அண்ணன் தம்பிகளாக உறவு பூண்டு வாழ்ந்து வந்த தமிழகத்திலே, இடைக் காலத்தில் புகுந்த அரசியல் விவகாரங்கள் சிறிது மனக்கசப்பை உண்டு பண்ணிவிட்டன" (தமிழரசில் முஸ்லிமகள், பக். 3-6) எனக் கவிஞர் எடுத்துக்காட்டுகிறார்.

முஸ்லீம்லீக் தேவை தானா?

‘முஸ்லீம்லீக் தேவை தானா?’ எனும் நூலினைக் கவிஞர் வெளியிட்டுள்ளார். இந்நூலில் கவிஞர் தமிழக முஸ்லீம்கள் குறித்தும் இந்திய முஸ்லீம்கள் குறித்தும் எழுதியுள்ளார். தமிழரசு அமைந்தால் அதில் முஸ்லீம்களின் நிலை என்னவாக இருக்கும் என்பது குறித்தும் கவிஞர் அந்நூலில் பதிவு செய்துள்ளார்.

தீவிர அரசியலில் தம்வாழ்நாள் முழுவதும் ஈடுபட்ட கவிஞர் தாம் நடத்திய பத்திரிக்கைகளின் வாயிலாக எண்ணிறந்த கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றில் இன்னும் ஏராளமான கட்டுரைகளை நூலாக வெளியிடவில்லை. கவிஞர் வாழ்ந்த காலத்தில் அவரே வெளியிட்ட நூல்கள் தான் மேற்காணும் நூல்கள். இம்மூன்று நூல்களைத் தவிர பத்திரிக்கைத் தலையங்கங்கள் எனும் ஒரு நூலும் வெளிவந்துள்ளது. இவை கவிஞரின் அரசியல் கட்டுரைகளாகத் திகழ்ந்து கவிஞரின் சமகாலத் தமிழக வரலாற்றை ஓரளவு அறிந்து கொள்ள உதவுகின்றன. வெளியிடாமல் புதைந்து கிடக்கும் கவிஞரின் அனைத்து அரசியல் கட்டுரைகளையும் பத்திரிக்கைத் தலையங்கங்களையும் தேடித் தொகுத்து வெளியிட்டால் தமிழக அரசியல் வரலாற்றிலும் இந்திய அரசியல் வரலாற்றிலம் புதிய அரசியல் வெளிச்சங்கள் கிடைக்கும்; அவ்வாறு செய்வது கவிஞருக்குத் தமிழகம் செய்யும் சீரிய தொண்டாகவும் அமையும்.

துணை நூற்கள் :

References

கா.மு. ஷெரீப், தமிழரசுக் கழகம் ஏன் வந்தது? என்ன சொல்கிறது?

மேலது., தமிழரசில் முஸ்லீமகள்

மேலது., களப்பாட்டு

மேலது., முஸ்லீம் லீக் தேவை தானா?

பி. யோகீசுவரன், திருவிதாங்கூர் தமிழர் போராட்ட வரலாறு

செ. திவான், காலம் போற்றும் கவி கா.மு. ஷெரீப், யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், 2 வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி (கோடம் பாக்கம் பாலம் அருகில்), தியாகராய நகர், சென்னை - 600 017, முதற்பதிப்பு : டிசம்பர் 2014.

ம.பொ. சிவஞானம், எனது போராட்டம், சென்னை, 1974.

என்.ஏ. வேலாயுதம், தமிழரசுக் கழகத் தலைவர்களின் வாழ்க்கையில், அன்பு நிலையம், நாகர் கோவில், 1957.